# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

### ஆணவத்தின் உச்சியில் நிற்கும் கோவை மாவட்ட நிர்வாகம்

அன்பார்ந்த தோழர்களே,

தொழிலாளி வர்க்கத்தின் மிகமுக்கியமான கேந்திரமான பகுதி கோவை மாவட்டம். தமிழகத்தின் மிகப்பெரிய SSA கோவை தான். இங்கு கடந்த பல வருடங்களாக தொழில் அமைதி சிறப்பாக காக்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது சில மாதங்களாக இங்கு ஊழியர் சங்கங்களோடு பேச்சு வார்த்தை நடத்தி பிரச்சனைகளை சுமுகமாக தீர்வு காண்பதற்கு பதிலாக, சங்கங்களை (அது ஊழியர் சங்கங்களாக இருந்தாலும் சரி, அதிகாரிகளின் சங்கங்களாக இருந்தாலும் சரி) இரண்டாம் பட்சமாக பார்க்கும் பார்வை என்பது தான் நிர்வாகத்திடம் உள்ளது. நிர்வாகத்தின் அடாவடித்தனம் எல்லை மீறிப்போன காரணத்தால் கோவை மாவட்ட BSNL ஊழியர் சங்கமும், TNTCWU சங்கமும் இணைந்து கால வரையற்ற உண்ணா நோன்பு போராட்டத்திற்கு சென்றுள்ளன. கோவை மாவட்டத்தில் பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்களுக்கு பல மாத காலம் ஊதியம் தரப்படாததை நமது சங்கங்கள் எடுத்துக் கூறியபோது செவிமடுக்காத மாவட்ட நிர்வாகம், நமது அகில இந்திய உதவி பொது செயலாளர் தோழர் S.செல்லப்பா அவர்கள் நடத்திய பேச்சு வார்த்தைக்குப் பின் அதற்கான ஏற்பாடுகளை செய்தது. தொழிலாளர் நல சட்டங்களை அமுல்படுத்தாத ஒப்பந்ததாரர்களை முடக்கியது வரை சரி. ஆனால், அதற்கு பின் அந்த ஒப்பந்ததாரரின் கீழ் பணியாற்றும் தொழிலாளர்களை வேலைக்கு வரவேண்டாம் என பணி நீக்கம் செய்தது. நமது போராட்டத்திற்கு பின் தற்போது அந்த தொழிலாளர்களை பில் அடிப்படையில் தற்காலிகமாக வேலைக்கு எடுத்துக் கொண்டது. ஆனால் அந்த தொழிலாளர்கள் பணியாற்றிய 19 நாட்களுக்கு 64 ஊழியர்களுக்கு ஊதியம் தர மறுக்கின்றது கோவை மாவட்ட நிர்வாகம். கேட்டால் எக்காளம் பேசுகின்றது.

கோவை மாவட்டம் காரமடை தொலைபேசி நிலையத்தில் சமீபத்தில் தீவிபத்து ஏற்பட்டது. 1¼ கோடி ரூபாய்களுக்கு மேல் செலவு செய்தும் இன்னமும் முழுமையாக சரி செய்யப்படாமல் உள்ளது. அது தவிர கடந்த 15 நாட்களுக்கு மேலாக வருவாய் இழப்பு. இத்தனைக்கும் காரணம் இரவு நேர காவலாளிப் பணிக்கு அங்கு ஆள் இல்லை என்பதே. இவ்வாறு கண் முன்னே உதாரணம் இருந்தும், தற்போது மீண்டும் மாவட்டம் முழுவதும் இந்த காவலாளி பணிகளை பார்க்கும் 75க்கும் மேற்பட்ட ஒப்பந்த ஊழியரை மாவட்ட நிர்வாகம் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டதை காரணம் கூறி வேலையை விட்டு நீக்கி உள்ளது.

சேவை மேம்பாட்டிற்காக நமது மாவட்ட சங்கங்கள் கூறிய கருத்துக்களை எல்லாம் ஏற்க மறுத்து இது போன்ற நடவடிக்கைகளில் இறங்கி வரும் கோவை

மாவட்ட நிர்வாகத்தின் இந்த செயல்களெல்லாம் தனியார் நிறுவனங்களுக்கு ஆதரவான செயல்களாகவே உள்ளன.

மாவட்ட நிர்வாகத்தின் இத்தகைய செயல்களால், தங்களின் அலுவலகம் மற்றும் கழிவறைகள் சுத்தம் செய்யப்படாததை கண்டித்து ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினால் அவர்களுக்கு "DIES NON" பரிசளிப்பது. அதே போல மாவட்டத்தில் பல இடங்களில் நல்ல முறையில் இயங்கி வரும் வாடிக்கையாளர் சேவை மையங்களை புறந்தள்ளி விட்டு வேறு பணிகளை அங்கு செயல்படுத்துவது என BSNL விரோத நடவடிக்கைகளை தொடர்ந்து மாவட்ட நிர்வாகம் நடத்தி வந்துள்ளது.

இவற்றை கைவிடக்கோரி 13 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து கோவை மாவட்ட சங்கங்கள் பல கட்ட போராட்டங்களை நடத்தி, பேச்சு வார்த்தைக்கு பின் ஒத்தி வைக்கப்பட்டன. ஆனாலும் மாவட்ட நிர்வாகத்தின் எதேச்சதிகார போக்கு எல்லையை தாண்டி போய்விட்ட காரணத்தால் கோவை மாவட்ட BSNL ஊழியர் சங்கத்தின் தலைவர் தோழர் K.சந்திரசேகரன், செயலாளர் தோழர் C.ராஜேந்திரன், TNTCWU மாவட்ட செயலாளர் தோழ ரவிச்சந்திரன், BSNL ஊழியர் சங்கத்தின் மாநில உதவி செயலாளர் தோழர் S.சுப்பிரமணியன் ஆகியோர் 21.05.2015 முதல் காலவரையற்ற உண்ணா நோன்பினை மேற்கொண்டு உள்ளனர்.

மாநில தலைமை பொது மேலாளர் அலுவலகத்தில் உள்ள DGM(A) மற்றும் GENERAL MANAGER(HR) ஆகியோரிடம் 21.05.2015 அன்று மதியமே மாநில செயலாளர் தொடர்பு கொண்டு பிரச்சனைய எடுத்து கூறி உள்ளார். அவர்களும் தலையிடுவதாக கூறினார்கள். ஆனால் 21.05.2015 மாலை வரை மாவட்ட நிர்வாகம் போராடும் ஊழியர்களை அழைத்து பேசவில்லை. கோவை மாவட்ட நிர்வாகம் ஆணவத்தின் உச்சியில் நின்று கொண்டு உள்ளது. 22.05.2015 அன்று மாநில செயலாளர் நேரடியாக கோவை மாவட்டத்தில் போராடும் ஊழியர்களுக்கு ஆதரவாக கோவை செல்கிறார். பிரச்சனைகள் தீரவில்லை என்றால் வலுவான இயங்கங்கள் நடத்தி கோவை மாவட்டம், தொழிலாளி வர்க்க போராட்டங்களின் முன்னணி மாவட்டம் என்பதை உறுதி செய்வோம். தொழிலாளர்களின் போராட்டங்களுக்கு முன் யாருடைய ஆட்டமும் செல்லாது என்பதை நிரூபிப்போம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

சென்னை
21.05.2015.

(A.பாபு ராதாகிருஷ்ணன்)
மாநில செயலாளர்.